செய்தி வெளியீடு எண்: 333 நாள்: 16.4.2010

# செய்தி வெளியீடு

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று (16.4.2010) தலைமைச் செயலகத்தில், மாநில விழிப்பு மற்றும் கண்காணிப்பு குழு கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாட்டில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் மத்திய அரசின் வளர்ச்சித் திட்டங்களான மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், பொன்விழா சுய வேலை வாய்ப்புத் திட்டம், நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம், முழு சுகாதார இயக்கம் ஆகியவற்றின் செயல்பாடுகளை கண்காணித்து ஆய்வு செய்திட அமைக்கப்பட்டுள்ள “மாநில விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு”–வின் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மேற்கண்ட பணிகளுக்காக 2009–10 ஆம் ஆண்டில் ரூபாய் 4044.94 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் ரூபாய் 4004.72 கோடி விடுவிக்கப்பட்ட விபரங்களையும், இதன் மூலம் எடுத்துக் கொள்ளப்பட்ட 85 லட்சத்து 22 ஆயிரத்து 922 பணிகளில், 62 லட்சத்து 12 ஆயிரத்து 963 பணிகள் முடிக்கப்பட்ட விவரங்கள் பற்றியும், மீதமுள்ள பணிகளின் முன்னேற்றங்கள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தினை தமிழகத்தில் திறம்பட செயல்படுத்தியமைக்காக உச்ச நீதிமன்றம் பாராட்டு தெரிவித்தது குறித்தும், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் தொகுப்பு வீடுகளுக்கு, தமிழ்நாடு அரசு வழங்கும் கான்கிரீட் கூரை அமைப்பதற்கான கூடுதல் தொகையும் சேர்த்து புதிய வீடு ஒன்றிற்கு 1.4.2010 முதல் அலகு தொகையினை ரூபாய் 60 ஆயிரமாக உயர்த்தியது குறித்தும், அகில இந்திய அளவில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட ஒதுக்கீட்டில் 97.14 விழுக்காடு செலவு செய்து, தமிழ்நாடு முதலிடம் வகிப்பது குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

**இக்கூட்டத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.டி.செங்குட்டுவன், திரு.டி.உதயசூரியன், திரு. சி.கோவிந்தசாமி, திரு.எஸ்.குணசேகரன், திருமதி.பி.சக்தி கமலாம்பாள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை முதன்மை செயலர் திரு. கே. அஷோக் வர்தன் ஷெட்டி, நிதித் துறை செயலர் திரு.பிரவீன்குமார், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் திரு.ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டு கழக மேலாண்மை இயக்குநர் திரு.சந்திரகாந் பி.காம்ப்ளே, மத்திய அரசின் ஊரக வளர்ச்சி துறை அமைச்சகத்தால் நியமிக்கப்பட்டவர்களான அலுவல் சாராத அலுவலர்கள் திரு. எம். சாமுவேல் திரவியம், திரு.பி.எஸ்.கனகராஜ், தன்னார்வ தொண்டு நிறுவன பிரதிநிதிகள் திரு.ப்பி.பி.சுகுமார், திரு. தங்கம் ஆர்.செல்வராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.**

*** * * * * * ***

**வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.**